# உங்கள் உரிமைகள் பற்றிய விளக்கம்

ஐரோப்பிய கைது ஆணையின் கீழ் அல்லது APB (ஆல் போர்ட்ஸ் புல்லட்டின்) கீழ் நீங்கள் கைது செய்யப்பட்டிருந்தால்



## விசாரணை துவங்குவதற்கு முன் எந்த உரிமைகள் பற்றி உங்களிடம் தெரிவிக்கப்பட வேண்டும்?

### 1. விசாரணையின் போது ஒரு வழக்கறிஞருடன் ரகசியமாகக் கலந்தாலோசிப்பதற்கும் சட்ட உதவி பெறுவதற்குமான உரிமை

#### A. வழக்கறிஞர்

— உங்கள் விருப்பப்படி ஒரு வழக்கறிஞரைத் தொடர்பு கொள்ள நீங்கள் கோரலாம்.

— உங்களுக்காக ஒரு வழக்கறிஞரை அமர்த்திக் கொள்ள முடியவில்லை என்றால் அல்லது உங்கள் வழக்கறிஞரால் கலந்து கொள்ள முடியவில்லை என்றால், பார் அசோசியேஷனின் பணி வழக்கறிஞர்கள் தொகுப்பிலிருந்து ஒரு வழக்கறிஞரைத் தொடர்பு கொள்வதற்காக நீங்கள் கோரலாம்.

— குறிப்பிட்ட சட்ட நிபந்தனைகளை நீங்கள் பின்பற்றினால், இந்தச் சட்ட உதவி முழுமையாக அல்லது ஒரு பகுதி மட்டும் கட்டணம் இல்லாமல் கிடைக்கும். சட்ட உதவிக்கான நிபந்தனைகளை உள்ளடக்கிய படிவத்தை நீங்கள் கேட்டுப் பெறலாம்.

#### B. முன் ரகசிய ஆலோசனை

— அடுத்த விசாரனைக்கு முன் - மற்றும் பார் அசோசியேஷனின் பணி வழக்கறிஞர் தொகுப்பிலிருந்த வழக்கறிஞருடன் பேசிய பிறகு 2 மணி நேரத்திற்குள் - உங்கள் வழக்கறிஞருடன் 30 நிமிடங்கள் கலந்தாலோசிப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. அந்த 30 நிமிடங்கள் விசாரணை அதிகாரியின் முடிவின்படி விதிவிலக்காக நீட்டிக்கப்படும்.

— இந்த ஆலோசனை தொலைப்பேசி மூலமாகவும் விசாரணை அமைவிடத்திலும் மேற்கொள்ளப்படலாம்.

— பார் அசோசியேஷனின் பணி வழக்கறிஞர்கள் தொகுப்பிலிருந்து ஒரு வழக்கறிஞருடன் ரகசிய தொலைப்பேசி ஆலோசனை மேற்கொள்ளப்பட்டு, 2 மணி நேரத்திற்குள் உங்கள் வழக்கறிஞருடன் திட்டமிட்ட ஆலோசனை மேற்கொள்ளப்படாமல் இருந்தால். இதன் பிறகு விசாரணை துவங்கும்.

— விசாரணை நடந்து கொண்டிருக்கும் பொழுது உங்கள் வழக்கறிஞர் வருகை தந்தால், விசாரணையின் மீதிப் பகுதியில் அவர் கலந்து கொள்ளலாம்.

#### C. விசாரணைகளின் போது சட்ட உதவி

— விசாரணைகளில் உங்கள் வழக்கறிஞரின் உதவி பெற உங்களுக்கு உரிமை உண்டு.

— உங்கள் வழக்கறிஞர் உறுதிப்படுத்தப்பட வேண்டியவை:

- பதில் அளிக்காமல் அமைதியாக இருப்பதற்கான உங்கள் உரிமைகள் மற்றும் உங்கள் மீது குற்றம் சுமத்தாமல் இருக்கக்கூடிய உங்கள் உரிமைகள் ஆதரவு அளிக்கின்றனவா;
- விசாரணையின் பொழுது நீங்கள் நடத்தப்படும் முறையில் ஏதேனும் தகாத நெருக்கடி தரப்படுகிறதா;
- உங்கள் உரிமைகள் பற்றி உங்களுக்கு விளக்கம் தரப்பட்டுள்ளதா என்னும் உண்மை நிலை மற்றும் விசாரணை முறை.

இந்த விசயங்களில் எதைப் பற்றியும் உங்கள் வழக்கறிஞருக்கு கருத்துகள் இருந்தால், அவற்றை உடனடியாக காவல்துறை விசாரணை அறிக்கையில் பதிவு செய்து பெற்றுக் கொள்ள வேண்டும்.
கேட்கப்பட இருக்கும் கேள்விகள் பற்றிய விளக்கங்களையும் அவர் கோரலாம். உங்களுக்காக அவர் பதில் அளிக்கவும் அல்லது விசாரணையைத் தடை செய்யவும் அவருக்கு அனுமதியில்லை.

— கூடுதலாக ஒரு ரகசிய ஆலோசனைக்காக விசாரணையை ஒரே ஒரு முறை மட்டும் தற்காலிமாக ஒத்தி வைக்க உங்களுக்கு அல்லது உங்கள் வழக்கறிஞருக்கு உரிமை உண்டு. விசாரனையின் பொழுது, புதிய கூறுகள் அல்லது குற்றங்கள் பற்றி அறிய நேர்ந்தால், உங்கள் வழக்கறிஞருடன் கூடுதலாக ஒரு ரகசிய ஆலோசனைக்கும் நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள். இந்த ஆலோசனை 15 நிமிடங்களுக்கு மேல் நீடிக்கக்கூடாது.

## D. உரிமை கைவிடல்

ஒரு வழக்கறிஞருடன் கலந்துரையாடுவதற்கான அல்லது ஒரு வழக்கறிஞரின் உதவியைப் பெறுவதற்கான வேண்டுகோளுக்கு உங்களுக்கு எவ்விதமான நிர்ப்பந்தமும் இல்லை.

நீங்கள் பின்வரும் நிலைகளில் தன்னிசைவின் அடிப்படையிலும் தீவிர முடிவுக்குப் பிறகும் இந்த உரிமையைக் கைவிடலாம்:

— சட்டரீதியான வயதை அடைந்தவராக இருந்தால்;

— இந்த நடைமுறைக்கான ஆவணத்தில் கையெழுத்திட்டு தேதியிடப்பட்ட பிறகு.

— சாத்தியமானால், விசாரணை திரைக்காட்சி ஆக்கப்படும். இதை உங்கள் வழக்கறிஞருடன் கலந்து பேசவும். (குறிப்பு எண்.7-ஐயும் காண்க).

இவ்விடயங்கள் தொடர்பில் வழக்கறிஞர் சங்கத்தின் பணி வழக்கறிஞர் குழாத்திலுள்ள ஒருவருடன் நீங்கள் தொலைபேசியில் கதைக்க முடியும்.

## E. விதிவிலக்கு

விதிவிலக்கான சூழ்நிலைகளிலும், நிர்ப்பந்தமான காரணங்கள் இருக்கும் பட்சத்திலும், விசாரனையின் போது முன் ரகசிய ஆலோசனை அல்லது ஒரு வழக்கறிஞரின் உதவி பெறும் உரிமையை அரசு வழக்கறிஞர் அல்லது விசாரணை செய்யும் நீதிபதி உங்களுக்கு வழங்காமல் இருக்கக்கூடும். அவர் இந்த முடிவுக்கான காரணங்களைக் குறிப்பிட வேண்டும்.

## F. ஐரோப்பிய கைது ஆணை பிறப்பித்த நாட்டின் வழக்கறிஞருக்கான உரிமை

ஐரோப்பிய கைது ஆணை பிறப்பித்த நாட்டின் வழக்கறிஞரை நியமிப்பதற்கு உங்களுக்கு உரிமை உண்டு. இந்த வழக்கறிஞர் பெல்ஜியத்தில் உள்ள உங்கள் வழக்கறிஞருக்கு ஒப்படைத்தல் முறைகள் பற்றிய தகவல்களையும் ஆலோசனைகளையும் வழங்குவார்.

## 2. ஐரோப்பிய கைது ஆணை அல்லது APB பற்றிய தகவல்கள்

— ஐரோப்பிய கைது ஆணை அல்லது APB-யின் சாராம்சத்தை அறிவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.

— ஒரு அபராதத்தைச் செயல்படுத்துவதற்கான கோணத்துடன் உங்கள் ஒப்படைத்தல் பொருந்தும் என்றால், மேலும் இந்தக் குற்றத் தீர்ப்பு அல்லது நிலுவையில் உள்ள குற்றவியல் நடைமுறைகள் பற்றி உங்களுக்குத் தெரியவில்லை என்றால், உங்கள் தகவலுக்காக வெளிநாட்டு குற்றத் தீர்ப்பின் நகலை வழங்குமாறு நீங்கள் கோரலாம். இது குறித்த நேரத்தில் ஏற்பாடு செய்யப்படவும் வேண்டும்.

## 3. பதில் கூறாமல் அமைதியாக இருக்கும் உரிமை

— எந்த நிலையிலும் உங்கள் மீது வலுக்கட்டாயமாகக் குற்றம் சுமத்த முடியாது.

— உங்கள் அடையாளத்தை நீங்கள் தெரிவித்த பிறகு, அறிக்கை தரலாம், கேட்கப்படும் கேள்விகளுக்குப் பதில் அளிக்கலாம் அல்லது பதில் எதுவும் கூறாமல் அமைதியாக இருக்கலாம்.

## 4. உங்கள் கைது பற்றி பிறருக்குத் தெரியப்படுத்துதல்

உங்கள் கைது பற்றி மூன்றாம் நபருக்குத் தெரியப்படுத்தும் உரிமை உங்களுக்கு உண்டு.

எனினும், புலனாய்வின் தன்மைக்கேற்ப அரசு வழக்கறிஞரால் அல்லது விசாரணை நீதிபதியால் நிர்ப்பந்தக் காரணங்களால் ஒரு குறிப்பிட்ட கால அளவிற்கு இதைத் தாமதப்படுத்த முடியும்.

## 5. மருத்துவ உதவி

— தேவைப்பட்டால் இலவச மருத்துவ உதவி பெற உங்களுக்கு உரிமை உண்டு.

— உங்களுக்கு விருப்பமான ஒரு மருத்துவரால் மருத்துவச் சோதனை செய்யப்படுவதற்கு நீங்கள் கோரலாம். அப்படிச் செய்தால் அதற்கான செலவை நீங்கள் ஏற்க வேண்டும்.

# உங்கள் உரிமைகள் பற்றிய விளக்கம்



## விசாரணையின் பொழுது உங்கள் கூடுதல் உரிமைகள் எவை?

### 6. விசாரணையின் பொழுது பிற உரிமைகள்

பல அறிவிப்புகளுக்குப் பிறகு விசாரணை துவங்கும். குற்றங்கள் பற்றிய சுருக்கமான பல அறிவிப்புகளுக்கும், நீங்கள் பதில் அளிக்காமல் அமைதி காப்பதற்கும் கூடுதலாக பின்வருபவை உங்களுக்கு அறிவிக்கப்படும்:

— உங்களிடம் கேட்கப்படும் அனைத்துக் கேள்விகளையும் நீங்கள் அளித்த அனைத்துப் பதில்களையும் உங்களால் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகளால் பதிவு செய்து தருமாறு நீங்கள் கோரலாம்;

— குறிப்பிட்ட விசாரணை மேற்கொள்ளப்படவும் குறிப்பிட்ட நபரிடம் விசாரணை மேற்கொள்ளப்படவும் நீங்கள் கோரலாம்;

— தயாரிக்கப்பட்ட உங்கள் அறிக்கைகள் நீதிமன்றத்தில் சான்றாதாரமாகப் பயன்படுத்தப்படும்.

— ஒரு விளைவாக விசாரணையைக் காலம் தாழ்த்தக் காரணமாக அமையும் வரை, உங்கள் பொறுப்பில் உள்ள ஆவணங்களை விசாரணையின் பொழுது நீங்கள் பயன்படுத்தலாம். விசாரணையின் பொழுது அல்லது அதற்குப் பிறகு, இந்த ஆவணங்களை காவல்துறை விசாரணை அறிக்கையில் இணைக்குமாறு அல்லது நீதிமன்ற ஆவணப் பதிவகத்தில் பாதுகாத்து வைக்குமாறு நீங்கள் கோரலாம்.

### 7. விசாரணையைத் திரைக்காட்சி ஆக்குதல்

— சாத்தியமானால், விசாரணை நடைமுறைகளைக் கண்காணிப்பதற்கு விசாரணை திரைக்காட்சி ஆக்கப்படும்.

— இது விசாரணை அதிகாரி, அரசு வழக்கறிஞர் அல்லது விசாரணை நீதிபதியால் முடிவு செய்யப்படும்.

### 8. விசாரணை முடிவில்

விசாரணை முடிவில், விசாரணையின் எழுத்துப் பிரதி உங்களுக்கு வாசிப்பதற்காகத் தரப்படும். அதை உங்களுக்கு வாசித்துக் காட்டுமாறும் நீங்கள் கோரலாம்.

உங்கள் அறிக்கையில் ஏதேனும் மாற்றம் செய்யவோ அல்லது சேர்க்கவோ நீங்கள் விரும்புகிறீர்களா என உங்களிடம் கேட்கப்படும்.

### 9. மொழிபெயர்ப்பாளர் உதவி

— உங்களால் அந்த மொழியைப் புரிந்து கொள்ளவோ அல்லது பேசவோ முடியவில்லை என்றால், அல்லது உங்களுக்குக் காது கேட்கும் திறன் அல்லது பேச்சுத் திறன் குறைபாடு இருந்தால், மற்றும் உங்கள் வழக்கறிஞருக்கு உங்கள் மொழியைப் புரிந்து கொள்ளவோ அல்லது பேசவோ முடியவில்லை என்றால், உங்கள் வழக்கறிஞருடனான ரகசிய ஆலோசனையின் போது உறுதிமொழி ஏற்ற ஒரு மொழிபெயர்ப்பாளரை அமர்த்திக் கொள்ள உங்களுக்கு உரிமை உண்டு. இந்த உதவி இலவசமானது.

— விசாரணை நடைமுறைகளின் மொழியிலிருந்து வேறுபட்ட ஒரு மொழியை நீங்கள் பேச விரும்பினால், விசாரணையின் பொழுது உறுதிமொழி ஏற்ற ஒரு மொழிபெயர்ப்பாளர் உங்களுக்கு உதவுவதற்காக நியமிக்கப்படுவார். இந்த உதவி இலவசமானது.

— உங்கள் அறிக்கையை உங்கள் சொந்த மொழியில் எழுத நீங்கள் கேட்டுக் கொள்ளப்படுவீர்கள்.

### 10. ஒப்படைத்தலுக்கு உடன்படுதல்

உங்களை ஒப்படைக்கக் கோரும் நாட்டுக்கு உங்கள் ஒப்படைத்தலுக்கு நீங்கள் உடன்பட வேண்டும். ஐரோப்பிய கைது ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ள குற்றங்களுக்கு உங்கள் உடன்படுதலை நீங்கள் உட்படுத்த வேண்டும். சிறப்பு நிலைச் சட்டவிதிகளையும் நீங்கள் கைவிட வேண்டும். அதாவது, நீங்கள் உங்களை ஒப்படைத்த பிறகு, ஒப்படைத்தல் பொருந்துவதற்கானவை தவிர குற்றங்களுக்காக விதிக்கப்பட்ட தண்டனையின் செயலாக்கத்தின் ஒரு பகுதியாக உங்கள் மீது வழக்கு தொடுக்கப்படலாம் அல்லது சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

விசாரணை நீதிபதியின் விசாரணைக்குப் பிறகு ஒப்படைத்தலுக்கு உடன்பட நீங்கள் விரும்பினால், அரசு வழக்கறிஞரால் உங்கள் வழக்கு விசாரிக்கப்பட வேண்டும். அரசு வழக்கறிஞர் ஊகங்களைத் தெளிவுபடுத்துவார். நீங்கள் உங்கள் வழக்கறிஞரின் உதவியை நாடலாம். அரசு வழக்கறிஞர் முன்னிலையில் மட்டும் ஒப்படைத்தலுக்காக நீங்கள் உடன்படலாம்.

ஒப்படைத்தலுக்காக சட்டரீதியாக நீங்கள் உடன்பட்டவுடன், உங்கள் ஒப்படைத்தல் தொடர்பாக நீங்கள் பின்னோக்கிச் செல்ல முடியாது.

# உங்கள் உரிமைகள் பற்றிய விளக்கம்

ஐரோப்பிய கைது ஆணையின் கீழ் அல்லது APB (ஆல் போர்ட்ஸ் புல்லட்டின்) கீழ் நீங்கள் கைது செய்யப்பட்டிருந்தால்



## எவ்வளவு காலம் நீங்கள் காவலில் வைக்கப்படக்கூடும்?

### 1. 48 மணி நேரம்

48 மணி நேரத்திற்கு மேல் உங்களைக் காவலில் வைக்கக்கூடாது.

### 2. விசாரணை நீதிபதி

— 48 மணி நேரத்திற்குள் (நீட்டிக்கச் சாத்தியமுள்ள மற்றொரு 48 மணி நேரத்திற்குள்) நீங்கள் விடுவிக்கப்படலாம் அல்லது விசாரணை நீதிபதி முன் ஆஜர்படுத்தப்படலாம். ஐரோப்பிய கைது ஆணையின்படி உங்களைக் காவலில் வைத்திருக்க வேண்டுமா அல்லது வேண்டாமா என்பதை விசாரணை நீதிபதி முடிவு செய்வார்.

— விசாரணை நீதிபதிக்கு முதலில் உங்களிடமிருந்து விசயத்தைக் கேட்க வேண்டிய கடமை உள்ளது. உங்கள் வழக்கறிஞரின் உதவியைப் பெற உங்களுக்கு உரிமை உண்டு. உங்களைக் கைது செய்வதற்கான ஆணையை பிறப்பிக்கக்கூடிய நிலை பற்றிய உங்கள் கருத்துகளை அல்லது உங்கள் வழக்கறிஞர் முன்வைக்கும் கருத்துகளை விசாரணை நீதிபதி கேட்டறிய வேண்டும்.

நீங்கள் சட்டப்பூர்வ வயதை அடைந்தவராக இருந்தால் மட்டும் வழக்கறிஞரின் உதவியைப் பெறுவதற்கான உங்கள் உரிமையைக் கைவிட முடியும்.

— விசாரணை நீதிபதி உங்களைக் கைது செய்வதற்கான ஆணையைப் பிறப்பிக்கும் பொழுது உங்களுக்குப் பின்வரும் உரிமைகள் உண்டு:

- ○ வரையறையின்றி உங்கள் வழக்கறிஞரிடம் பேசுவதற்கு உங்களுக்கு உரிமை உண்டு.
- ○ கைது செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் நீங்கள் கமிட்டல்ஸ் சேம்பர் முன் ஆஜராக வேண்டும். அங்கு ஐரோப்பியக் கைது ஆணையின் கீழ் உங்கள் காவல் பற்றியும் ஒப்படைத்தல் நிலை பற்றியும் வாதம் புரியலாம். இந்த முடிவை எதிர்த்து இண்டிக்ட்மெண்ட்ஸ் சேம்பர் முன் நீங்கள் மேல்முறையீடு செய்யலாம். அது 15 நாட்களுக்குள் உங்களுக்குத் தீர்ப்பு வழங்கும். கமிட்டல்ஸ் சேம்பர் முடிவு உங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட 24 மணி நேரத்திற்குள் மேல்முறையீடு தாக்கல் செய்யப்பட வேண்டும்.
- ○ கமிட்டல்ஸ் சேம்பர் அல்லது இண்டிக்ட்மெண்ட்ஸ் சேம்பரின் வாய்தாவுக்கு ஒரு நாள் முன்னதாக உங்கள் வழக்குக் கோப்பு பற்றி ஆலோசிக்க நீங்கள் அனுமதிக்கப்படுவீர்கள்.
- ○ இந்த நடைமுறை நிகழ்வுகளின் போக்கை மேலும் விரிவாக உங்கள் வழக்கறிஞர் விவரிப்பார்.
- ○ நீங்கள் பெல்ஜிய நாட்டவர் இல்லை என்றால், உங்கள் கைது பற்றி உங்கள் தூதரக அதிகாரிகளிடம் தெரிவிக்க வேண்டும்.
- ○ ஐரோப்பிய கைது ஆணையின் மொழி, அல்லது அதை மொழிபெயர்க்கப்பட்டுள்ள மொழி உங்களுக்குப் புரியவில்லை என்றால், நீங்கள் புரிந்து கொள்ளக்கூடிய மொழியில் ஐரோப்பிய கைது ஆணையின் எழுத்துப்பூர்வமான மொழிபெயர்ப்பு அல்லது ஐரோப்பிய கைது ஆணையின் உரையாடல் வழியான மொழிபெயர்ப்பு அல்லது அத்தியாவசியமான நடைமுறை ஆவணங்களின் உரையாடல் வழியான மொழிபெயர்ப்பு, கமிட்டல்ஸ் சேம்பர் முன், மற்றும் செயலாக்கம் தொடர்பாகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள சமீபத்திய இறுதிச் சட்டவிதிகளின் முன் நீங்கள் ஆஜராவதற்கு முன் உங்களுக்கு வழங்கப்படும்.

**உங்கள் உரிமைகள் பற்றிய இந்த விளக்க ஆவணத்தை பாதுகாப்பாக வைத்திருக்கவும்.**